# உள்ளூர் சந்தையில் தரமான உற்பத்திப்பொருட்களின் விற்பனை தொடர்பாக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வகிபங்கு

இலக்கம் : ரீஈசீ/பீ/எஸ்எல்எஸ்ஜ/1/19/பிஏயூ/37

## தேசிய கணக்காய்வு அலுவலகம்

**ஐஎம்ரீ பிரிவு**

# உள்ளடக்கம்


| தொடர் இல. | பந்தி இல. | பந்தி | பக்க இல. |
|---|---|---|---|
| **01** | | நிறைவேற்று பொழிப்பு | 01 |
| **02** | | பின்னணி | |
| | 2.1 | அறிமுகம் | 02 |
| | 2.2 | தலைப்பை தெரிவுசெய்தமைக்கான காரணம் | 04 |
| | 2.3 | கணக்காய்விற்கான அதிகாரம் | 05 |
| | 2.4 | கணக்காய்வு நோக்கங்கள் | 05 |
| | 2.5 | கணக்காய்வு அளவுகோல்கள் | 05 |
| | 2.6 | கணக்காய்வின் நோக்கெல்லை | 06 |
| | 2.7 | தொடர்புடைய நிறுவனங்கள் | 06 |
| **03** | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | |
| | 3.1 | நிறுவன பின்னணி மற்றும் தயாரிப்பு | 07 |
| | 3.1.1 | சட்டப் பின்னணி | 07 |
| | 3.1.2 | நிறுவக ரீதியான முறைமை | 09 |
| | 3.1.3 | நிறுவக ரீதியான திட்டங்கள் | 10 |
| | 3.2 | நிறுவனத்தின் செயற்பாடு | |
| | 3.2.1 | ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல் | 11 |
| | 3.2.2 | உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னத்தை (Logo) பெற்றுக்கொள்ளல் (SLS சான்றிதழ்) | 12 |
| | 3.2.3 | நியமங்களின் பயன்பாடு | 13 |
| | 3.2.4 | சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் | 14 |
| | 3.3 | நியாயமான சந்தைக்கான பின்னணியை உருவாக்குதல் | |
| | 3.3.1 | நிராகரிக்கப்பட்ட பொருட்கள் | 15 |
| | 3.3.2 | பொருட்களின் தர சிக்கல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் | 17 |
| | 3.3.2.1 | எரிவாயு தொடர்பான பிரமாணம் | 17 |
| | 3.3.2.2 | இறக்குமதி செய்யப்பட்ட பால்மா | 18 |
| | 3.3.2.3 | பீங்கான் | 19 |
| | 3.3.2.4 | தானிய உணவுகள் | 19 |
| **04** | | பரிந்துரை | 20 |
| | | பின்னிணைப்புக்கள் | |

**நிறைவேற்று பொழிப்பு**

------------------------------------

இலங்கை நியமங்கள் நிறுவனம் 1964 இன் 38 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் பணியக சட்டத்தின் கீழ் இலங்கை நியமங்கள் பணியகம் என்ற பெயரில் நிறுவப்பட்டது. 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டம் இலங்கை நியமங்கள் பணியக சட்டத்தை நீக்கி இலங்கை நியமங்கள் நிறுவனத்தை நிறுவியது. இது இலங்கையின் நியமங்கள் மற்றும் தர முகாமைத்துவ நடைமுறைகளின் தரப்படுத்தலை சாத்தியமாக்குகின்றது

இலங்கை நியமங்கள் நிறுவனம் SLS சின்னம் (logo), இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரக் கட்டுப்பாடு, ஆய்வுகூட சேவைகளை வழங்குதல், இலங்கை நியமங்களின் தரப்படுத்தல், கைத்தொழில்துறை தரக் கட்டுப்பாட்டின் நியமப்படுத்தல் மற்றும் தரப்படுத்தல், நூலக சேவையின் பராமரிப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் என்பவற்றை வழங்குகிறது. இந்தச் சேவைகளை வழங்குவதற்கும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் நிறுவனம் 12 உப கிளைகளாக பேணப்படுகின்றது. இப் பிரிவுகளில் உற்பத்திப் பொருள் சான்றிதழ் பிரிவு, முறைமைகள் சான்றிதழ் பிரிவு, சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பிரிவு, விஞ்ஞானவியல் தரப்படுத்தல் பிரிவு, பொறியியல் தரப்படுத்தல் பிரிவு, தர உறுதிப்பாட்டு பிரிவு, பயிற்சிப் பிரிவு, நிதிப் பிரிவு, ஆவணப்படுத்தல் மற்றும் தகவல் பிரிவு, நிர்வாகப் பிரிவு, ஆய்வுகூட பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு என்பன உள்ளடங்குகின்றன.

வாடிக்கையாளருக்கு உயர்தர உற்பத்திப் பொருட்களை வழங்குவதில் அதன் வகிபங்கிற்காக நிறுவனம் மிகவும் மதிக்கப்படுகிறது. இலங்கை நியமங்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முன்வரும் உற்பத்தியாளர்களுக்கு முறைமைப்படுத்தப்பட்ட முறையில் இலங்கை நியமங்கள் சான்றிதழை வழங்குவதும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை பரீட்சித்து அது தொடர்பான தர அறிக்கையை சமர்ப்பிப்பதும் இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

உற்பத்திப் பொருளொன்று சரியான அளவுகோல் அளவு மற்றும் சரியான அளவு சேர்க்கப்பட வேண்டும் என்பது சுகாதார பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைக்கு மிகவும் முக்கியமானதாகும். பாதுகாப்பான மற்றும் சுகாதார பிரச்சனைகள் இல்லாத உற்பத்திப்பொருட்களை நுகரும் மக்கள் இருக்கும் நாட்டில் அபிவிருத்தி மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில், ஆரோக்கியமான உணவுப் பாவனையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அரசாங்க செலவினங்களைக் குறைக்கும் ஆற்றலையும் இலங்கை கொண்டுள்ளது. அதற்காக, உள்ளூர் உற்பத்தியாளர்களை தொடர்ந்து ஊக்குவிக்க வேண்டும். இதில் இலங்கை நியமங்கள் நிறுவனம் ஆற்றக்கூடிய பங்கு மிகவும் முக்கியமானதாகும். இதற்கான ஏற்பாடுகள் 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்ப்படுத்துவதிலும், சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதிலும் நியமங்கள் நிறுவனம் எவ்வாறு செயற்பட்டது என்பதை ஆராய்வதற்காக இச் செயலாற்றல் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை பரீட்சிக்கும் போது சோதனை அறிக்கைகள் வழங்கப்படுவதற்கு முன்னதாகவே சந்தைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் விடுவிக்கப்பட்டுதல், நியமச் சான்றிதழை வழங்குவதில் குறைபாடுகள், முகாமைத்துவ குறைபாடுகள், ஆய்வுகூட சோதனைகளை நடாத்துவதில் தாமதம், சந்தை பரீட்சிப்புக்களின் குறைந்தபட்ச நிலை, முன்-நியமங்களின் பயன்பாடு, சோதனை அறிக்கைகள் குறித்த விழிப்புணர்வு குறைவடைதல் ஆகிய சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. பொருட்களை முறையாகக் கையாள்வதில் தோல்வி போன்ற பிரச்சினைகள் குறித்த அவதானிப்புக்களை இந்த அறிக்கை மேற்கொள்கிறது.

மேற்குறிப்பிட்ட அவதானிப்புக்கள் தொடர்பில் எழக்கூடிய சிக்கல்களைக் குறைப்பதற்கு இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னத்தைப் பெறுவதன் முக்கியத்துவம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தெரியப்படுத்துதல், சின்னத்தை வழங்குவதற்கான பொறிமுறையை மேலும் வலுப்படுத்துதல், தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னங்களை வழங்குதல் மற்றும் இந்த அறிக்கை எவ்வாறு நிறுவன ரீதியாக தேவையான வளமூலங்களை வழங்குகின்றது மற்றும் ஆய்வுகூட சோதனைகளை நடாத்தி அதன் மூலம் அச் செயன்முறைகளை விரைவுபடுத்துகின்றது பற்றிய பரிந்துரைகளை வழங்குகிறது.

## 2. பின்னணி

### 2.1 அறிமுகம்

உலகில் பல்வேறு உற்பத்திபபொருட்களின் உற்பத்தி மற்றும் அறிமுகம் பல்வேறு தொழில்நுட்ப முன்னேற்றங்களின் கீழ் வேகமாக முன்னேறி வருகிறது. புதிய உற்பத்திப்பொருள் மற்றும் தயாரிப்பு மனித உடலுக்கும் சுற்றுச்சூழலுக்கும் எவ்வளவு நல்லது என்பதை மதிப்பீடு செய்வது முக்கியமாகும். இந் நோக்கத்திற்காக இலங்கையில் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் இயற்றப்பட்டு இந்நோக்கத்திற்காக விசேட முகவராண்மைகளும் நிறுவப்பட்டுள்ளன. உற்பத்திப்பொருள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் எந்த நிறுவனத்தால் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்பது பொருட்களின் தன்மையைப் பொறுத்தது. இலங்கை நியமங்கள் நிறுவனம் அத்தகைய நிறுவனங்களில் ஒன்றாகும்.

இலங்கை நுகர்வோர் விவகார அதிகாரசபை மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சிடமிருந்து இலங்கை நியமங்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் 2018 மார்ச் 29 இல் வெளியிடப்பட்ட 2064/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில்

வெளியிடப்பட்டுள்ளது. இவற்றில் 48 உணவுப் பொருட்களாக இருந்ததுடன் 74 உணவுப்பொருட்கள் அல்லாதவையாகும்.

இலங்கை நியமங்கள் நிறுவனம் இலங்கை நியமங்களை நிர்ணயித்து அந்த நியமத்திற்கு இணங்க பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதை சான்றுறுதிப்படுத்துகிறது. நியம சான்றிதழ் தேவைப்படுகின்ற உற்பத்திப் பொருட்களிற்கு உற்பத்தியாளர்கள் SLS சின்னத்தை பெற வேண்டும். உள்நாட்டு வர்த்தகம்/ நுகர்வோர் பாதுகாப்புத் திணைக்களத்தால் கட்டளையிடப்பட்ட உற்பத்திப்பொருள் நியமங்கள் முகவராண்மையால் தொடர்புடைய பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், ஏனைய முகவராண்மைகளும் போட்டியை எதிர்கொள்ள நியம சான்றிதழைப் பெறுகின்றன. அத்துடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உற்பத்திப்பொருட்கள், வணிகப்பொருட்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் எந்தவொரு செயன்முறை விதிகள் மற்றும் நடைமுறைகளுடன் இணங்குவதைத் தீர்மானிப்பதற்கும், அத்துடன் அதிநவீன கருவிகள், அளவீட்டு கருவிகள் மற்றும் விஞ்ஞானவியல் கருவிகளின் சோதனை மற்றும் அளவீடுகளுக்கான நியமங்களிற்கும் சோதனையிடப்படுகின்றன. சான்றிதழ்களை வழங்குதல், அத்தகைய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் அல்லது எளிதாக்குதல் ஆகியவை நியமங்கள் நிறுவனத்தின் முதன்மை செயல்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவனச் சட்டம் நிறுவனத்தை நிறுவுவதற்கான நோக்கங்களாகப் பின்வருவனவற்றை இனங்கண்டிருந்தது.

(அ) வடிவமைப்பு, பண்டம், நடைமுறை மற்றும் செயன்முறை தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் நியமங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றை அவ்வப்போது மீளாய்வு செய்தல், மாற்றியமைத்தல் மற்றும் திருத்துதல் மற்றும் அக் கொள்கைகளுக்கு பொதுவான பின்பற்றுதலை மேம்படுத்துதல்.

(ஆ) தொழில்துறை மற்றும் வணிகத் துறைகளில் தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டை மேம்படுத்துதல்.

(இ) தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை விரிவுபடுத்தி தொடர்புடைய வசதிகளை வழங்கும் நோக்கத்திற்காக ஆய்வுகூடங்கள் மற்றும் நூலகங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.

(ஈ) 1979 இன் 52 ஆம் இலக்க புலமைச் சொத்துக் குறியீடு அல்லது தர நியமங்கள் அல்லது ஏனைய நியமங்களின் பிரகாரம் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் உள்ளடங்கிய உற்பத்திப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் உட்பட மருந்துப் பொருட்கள் மற்றும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், பண்டங்கள் என்பன செயன்முறைப்படுத்தல் நடைமுறைகள் மற்றும் ஏதேனும் ஏனைய எழுதப்பட்ட

நடைமுறை விதிகளுடன் இணங்குவதை தீர்மானிப்பதற்கு வசதிகள் அல்லது சோதனைக்கான வசதிகளை வழங்குகின்றன.

(உ) அதிநவீன கருவிகள், அளவீட்டு கருவிகள் மற்றும் விஞ்ஞானவியல் கருவிகளின் ஆய்வு மற்றும் அளவீடு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல் அல்லது எளிதாக்குதல்.

(ஊ) தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாடு தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் அல்லது ஏற்பாடு செய்தல்.

(எ) இந்தச் சட்டத்தின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு இணங்க சான்றுபடுத்தல் குறி திட்டமொன்றை (certification mark scheme) செயற்படுத்துதல்.

(ஏ) உள்நாட்டு நுகர்வு அல்லது ஏற்றுமதிக்கான பண்டங்கள், உற்பத்திப்பொருட்கள், மற்றும் ஏனைய பொருட்களின் தரத்தை சான்றுறுதிப்படுத்தல்.

(ஐ) கல்வி, ஆலோசனை மற்றும் ஏனைய வழிகள் மூலம் தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டை ஊக்குவித்து மேம்படுத்துதல்.

(ஒ) நிறுவனம் சில நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்படுவதுடன் இலங்கைக்கு வெளியில் உள்ள நபர்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்த நோக்கங்களுடன் ஒத்துழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

(ஓ) பண்டங்கள், உற்பத்திப்பொருட்கள், உபகரணங்கள், சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் முறைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு உற்பத்தியாளர்கள் மற்றும் பயன்படுத்துநர்களின் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு பல்வேறு வகையான சேவை வழங்கல்களில் ஈடுபட்ட போதிலும் இந் நோக்கங்களை எந்த அளவிற்கு செயற்திறனாக அடைந்துகொள்ள நிறுவனத்தால் முடிந்தது என்பதை மதிப்பிடுவதற்காக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வழங்கப்படகின்றது.

## 2.2 தலைப்பைத் தெரிவுசெய்தமைக்கான காரணம்

1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவது மற்றும் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்துகொள்வதில் இலங்கை நியமங்கள் நிறுவனம் பெற்ற வெற்றியை ஆராய்வதற்காக இந்த செயலாற்றல் கணக்காய்வு நடாத்தப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான அதிகாரம்

-----------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்புரையின் கீழ் இச் செயலாற்றல் கணக்காய்வு நடாத்தப்பட்டது.

## 2.4 கணக்காய்வின் நோக்கங்கள்

-----------------------------------------------------

இந்த அறிக்கையில் உள்ள அவதானிப்புகள் மூலம் பின்வரும் நோக்கங்களின் செயலாற்றல் கலந்துரையாடப்படுகிறது.

(அ) நிறுவனத்தின் நோக்கங்களையும் அதன் சட்டப் பின்னணியையும் வெற்றிகரமாக அடைந்துகொள்ள போதுமான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்

(ஆ) நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ள திட்டமிடல் செயன்முறை நிறுவப்பட்டுள்ளதா

(இ) நிறுவனத்தின் திட்டத்தை தெளிவாகவும் முறையாகவும் அமுல்ப்படுத்துவதற்கு முறையான வழிகாட்டுதலை வழங்குவதற்கு வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா மற்றும் அதில் போதுமான உண்மைகள் உள்ளனவா.

(ஈ) நிலையான சான்றுபடுத்தல் முறைமைக்குள் வாடிக்கையாளரைப் பாதுகாக்கும் விதத்தில் பொருட்களை வழங்குவதற்கான சான்றுபடுத்தல் முறைமை உள்ளதா

(உ) ஆய்வுகூடங்களில் சோதனை செய்ய முடியாத மூலப்பொருள்களின் தொடர்புடைய வழிமுறை மற்றும் சோதனையில் தொடர்புடைய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதற்கு ஆய்வுகூடங்களால் செய்யப்படும் மாதிரி சோதனைகள்

(ஊ) நியாயமான சந்தையை உருவாக்குவதில் நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதை மதிப்பிடுதல்

## 2.5 கணக்காய்வு அளவுகோல்கள்

-----------------------------------------------------

இக் கணக்காய்வு பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் நடாத்தப்பட்டது.

(அ) 1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவனத்தை நிறுவும் சட்டம்

(ஆ) 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2018 மார்ச் 29 ஆம் திகதிய 2064/34 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

(இ) 2010 ஏப்ரல் 01 இல் இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஜீஎல் - II - 04 ஆம் இலக்க வழிகாட்டல்

(ஈ) உணவு, மருந்து மற்றும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட நியமங்கள்

(உ) 2019 ஆம் ஆண்டிற்கான இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம்

(ஊ) 1979 இன் 01 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள்

**2.6 கணக்காய்வின் நோக்கெல்லை**

---------------------------------------------------

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரம் இலங்கை நியமங்கள், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் செயலாற்றல் சோதனை மதிப்பீடு, இலங்கை நியமங்கள் நிறுவனம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள், இலங்கை சுங்கத் திணைக்களம், நுகர்வோர் விவகார அமைச்சு போன்ற நிறுவனங்களால் அமுல்ப்படுத்தப்படும் விற்பனை மற்றும் விளம்பர நடவடிக்கைகளுடன் இணங்கவில்லை. 2019 சனவரி முதல் 2021 யூன் வரையிலான கொடுக்கல்வாங்கல்களை கையாளுதல் தொடர்பாக ஆராயப்பட்டது. இங்கு மாதிரியின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் ஆழமாக ஆய்வு செய்யப்பட்டன.

**2.7 தொடர்புடைய நிறுவனங்கள்**

-----------------------------------------------

| **நிறுவனம்** | **நிறுவனத்தின் வகிபங்கு சுருக்கமாக** |
|---|---|
| இலங்கை சுங்கம் | இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விடுவிப்பதில் இலங்கை நியமங்கள் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுதல் |
| நுகர்வோர் விவகார அதிகாரசபை | நியமத்திற்கு சான்றுபடுத்தப்பட வேண்டிய பொருட்களின் பட்டியலை நாளதுவரையாக்குதல், பொருட்களின் சந்தை ஆய்வுகளை நடாத்துதல், அவதானிக்கப்பட்ட குறைபாடுகளை ஆய்வு செய்தல், நிராகரிக்கப்பட்ட பொருட்களின் மீது நடவடிக்கைகளை எடுத்தல் போன்றன. |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 நிறுவன பின்னணி மற்றும் தயாரிப்பு

### 3.1.1 சட்டப் பின்னணி

இலங்கை நியமங்கள் நிறுவனம் இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், 1985 இன் 48 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் இலங்கை நியமங்கள் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

மேலும், 1979 இன் 01 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை நியமங்கள் சான்றிதழை பெறுவது கட்டாயமாகும். அதன் பிரகாரம் இலங்கை நியமங்கள் நிறுவனம் இறக்குமதி பொருட்கள் தொடர்பான வழிகாட்டலொன்றை தயாரித்திருந்தது.

வழிகாட்டல் வரிசையின் ஜீஎல் - 11 - 04 இன் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் இனங்காணப்பட்டன.

(i) ஒரு உற்பத்தி கம்பனி சரக்கு தொகுதியொன்றை இறக்குமதி செய்யும் போது, அந்த நாட்டில் உள்ள இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட அரசாங்க முகவராண்மை, ஆய்வுகூடம் அல்லது சோதனை நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து அந்த உற்பத்தி கம்பனியால் பெறப்பட்ட இணக்கச் (Conformity) சான்றிதழ் இருந்தால், அந்த சரக்குத் தொகுதி பரீட்சிப்பு இல்லாமல் விற்பனை செய்யப்படுவதற்கு அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதுடன் சரக்குத் தொகுதி மேற்கொள்ளப்படும் போது 03 இல் ஒரு மாதிரி சோதனையை மேற்கொள்ளுதல்.

(ii) இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் குறிப்புரைகளுக்கு இணங்க சம்பந்தப்பட்ட உற்பத்தி கம்பனி, இறக்குமதி சரக்குத் தொகுதி தொடர்பாக பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டின் தேசிய நியமங்கள் நிறுவனத்திடம் இருந்து இணக்க சான்றிதழைப் பெற்றிருந்தால் சரக்கு பரீட்சிப்பு இல்லாமல் விற்பனை செய்யப்படுவதற்கு அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் 03 இல் ஒரு மாதிரி சோதனையை மேற்கொள்ளுதல்.

(iii) பொருட்களை உற்பத்தி செய்பவர் இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்து இணக்கச் சான்றிதழைப் பெற்றிருந்தால், அது பரீட்சிப்பின்றி விற்பனை செய்வதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அங்கிகரிக்கப்படுகிறது, சரக்குத்தொகுதி

இறக்குமதி செய்யப்படும் ஐந்து சந்தர்ப்பங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு மாதிரி சோதனை செய்யப்படுகிறது.

(iv) இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் குறிப்புரைகளுக்கு இணங்க உற்பத்திப்பொருள் தயாரிக்கப்பட்டு, உற்பத்தி செய்யும் நாட்டின் தேசிய நியமங்கள் நிறுவனத்திடமிருந்து உற்பத்திப்பொருள் சான்றுபடுத்தல் சின்னம் பெறப்பட்டிருந்தால் பரீட்சிப்பு இன்றி பொருட்கள் விற்பனை செய்யப்படுவதற்கு அல்லது பயன்படுத்தப்படுவதற்கு அங்கீகரிக்கப்படுகின்றன. 08 இறக்குமதிகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாதிரி சோதனையும் உற்பத்திப்பொருள் மற்றொரு நாட்டின் சின்னத்தை கொண்டிருந்தால் ஐந்து நிகழ்வுகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு மாதிரி சோதனையும் மேற்கொள்ளப்படுகின்றது.

மாதிரி சோதனைகளின் அளவை நிர்ணயிப்பதில் உற்பத்தியாளர், ஆய்வுகூடங்கள் மற்றும் இறக்குமதியாளரின் கடந்தகால கொடுக்கல் வாங்கல்களின் செயலாற்றல் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறதுடன் கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வழிகாட்டல் தொகுப்பேட்டின் முதலாவது வகைப்படுத்தலின் கீழ், ”இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு இணங்குவதற்கான சான்றிதழ்களை வழங்கும் வெளிநாட்டு ஆய்வுகூடங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் அல்லது ஏனைய அரசாங்க முகவராண்மைகள் இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்”, பழுப்பு சீனிக்காக இரண்டு சான்றுபடுத்தல் முகவராண்மைகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. ரின் மீன்களுக்காக சான்றுபடுத்தல் முகவராண்மைகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வழிகாட்டல்களின் மூன்றாவது வகைப்படுத்தலின் கீழ், உற்பத்தி கம்பனி இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டு, பொருட்களை இறக்குமதி செய்யும் போது இணக்கச் சான்றிதழைப் பெற்றால், அது மாதிரி சோதனையின்றி விற்கவோ பயன்படுத்தவோ அனுமதிக்கப்படுவதுடன் சரக்குத்தொகுதி இறக்குமதி செய்யப்படும் 5 சந்தர்ப்பங்களில் எழுமாறான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படும். 2019 சனவரி முதல் 2021 யூன் வரை பழுப்பு சீனி 89 கம்பனிகளால் 1014 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்டதுடன் எந்தவொரு உற்பத்தியாளரும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டு இணக்கச் சான்றிதழைப் பெற்றிருக்காததுடன் விரிவான மாதிரிகள் 49 தடவைகள் மாத்திரமே எடுக்கப்பட்டன. 2019 சனவரி முதல் 2021 யூன் வரை, 48 வியாபார குறியீட்டு பெயர்களில் 1522 சந்தர்ப்பங்களில் 36 உற்பத்தி கம்பனிகளிடமிருந்து ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்டதுடன் 05 உற்பத்தியாளர்கள் 20 வியாபார குறியீட்டு பெயர்களுக்காக மாத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ரின் மீன்களின் விரிவான மாதிரிகள் எடுக்கப்பட்டிருக்காத போதிலும் பதிவுசெய்யப்படாத ஏனைய 31

உற்பத்தியாளர்களும் ஐ.அ.டொலர் 92,205,253.54 பெறுமதியான 4,395,416 கொள்கலன்களை இறக்குமதி செய்திருந்தனர். இது பழுப்பு சீனி மற்றும் ரின் மீன்களுக்கு முறையே 5% மற்றும் 0% ஆக காணப்பட்டன.

(இ) சரக்கு தொகுதிகளில் அனைத்து நான்கு சந்தர்ப்பங்களுடனும் இணங்காததற்காக பழுப்பு சீனி இறக்குமதி செய்யப்பட்ட போது 31 சந்தர்ப்பங்களில் பரீட்சிப்பின்றி சரக்கு விற்பனை செய்ய அல்லது பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட அதே நேரம் ஐ.அ.டொலர் 2,391,388.95 பெறுமதியான 6323.3 மெற்றிக் தொண் பழுப்பு சீனி சோதனை இல்லாமல் விடுவிக்கப்பட்டது.

(ஈ) இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதால், நியமங்கள் நிறுவனத்தின் பரீட்சிப்பு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும் வரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைக்கு விடவிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான சரியான வழிகாட்டல் அல்லது வழிமுறையை கம்பனி கொண்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.2 நிறுவக ரீதியான முறைமை

(அ) இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு வசதியளிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் கணனி தரவுத்தளம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இதுவரை மாதிரி வரையிலான தரவு மாத்திரமே தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மாதிரிச் சோதனைக்குப் பின்னர், கணக்காய்வு திகதியான 2021 மே வரை, சோதனை முடிவுகளின் அடிப்படையிலான அங்கீகாரங்கள், மறு மாதிரிகள், பொருட்களை மறுத்தல் மற்றும் மீள்-ஏற்றுமதிக்கான பரிந்துரைகள் என்பன தொடர்புடைய தரவுத்தளத்தின் மூலம் மேற்கொள்ளப்படாதமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) இலங்கை நியமங்கள் நிறுவனம், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுக்கு இடையில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்கள் தொடர்பாக நல்ல உள்ளக தொடர்பு இருக்க வேண்டிய போதிலும் அத்தகைய முறைமை எதுவும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. இதனால், தரமற்ற பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் அபாயம் அதிகளவில் காணப்படுவதுடன் இலங்கை சுங்கக் கோவைகளை பரிசோதித்த போது அவ்வாறான தரமற்ற பொருட்கள் சந்தைக்கு விடப்படுகின்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. நியமங்கள் நிறுவனம் இது தொடர்பாக பின்தொடர்வதற்கு பொருத்தமான வழிமுறையை உருவாக்கியிருக்கவில்லை.

(இ) இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கு இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் (SLS) உற்பத்திப்பொருள் சான்றிதழை (SLS) பெற்றுக்கொள்வது கட்டாயமாகும், ஆனால் உயர்தர சுகாதாரமான உணவுப் பொருட்களை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் எந்தவொரு உணவுப் பொருளுக்கும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் (SLS) உற்பத்திப்பொருள் சான்றிதழ் (SLS) பெற்றுக்கொள்ளப்படுகின்றது. 2019 சனவரி 01 இல் இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட LT - PC - 01 உற்பத்திப்பொருள் சான்றிதழ் கட்டாய உற்பத்திப்பொருட்களின் பட்டியலின் பிரகாரம் கட்டாயமாக காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஒரு புதிய உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் முதலாவது சந்தர்ப்பத்தின் போது அத்தகைய சோதனை எப்போது மீண்டும் செய்யப்பட வேண்டும் மற்றும் இடையில் அத்தகைய சோதனைகள் எப்போது செய்யப்பட வேண்டும் என்பதை விளக்கிய உள்ளக வடிவமைப்பொன்று அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.3 நிறுவக ரீதியான திட்டங்கள்

-----------------------------------------------

**(அ) செயற்பாட்டு மற்றும் நிதித் திட்டங்கள்**

2019 திசெம்பரில் உள்ளவாறு SLS முத்திரையிடப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 1105 ஆக இருந்த போதிலும் சந்தை சோதனைகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்ததுடன் உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னத்தின் கீழ் உள்ள உற்பத்திப் பொருட்களின் தரம் தொடர்பாக சந்தை பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கான செயல்நடவடிக்கை திட்டங்களின் பிரகாரம் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பிடப்பட்ட பரீட்சிப்புக்களின் எண்ணிக்கை முறையே 40, 60, 48 ஆக காணப்பட்டதுடன் நடாத்தப்பட்ட சோதனைகளின் உண்மையான எண்ணிக்கை முறையே 19, 39, 35 ஆகும். மேலும், 2019 இற்காக சந்தை பரீட்சிப்புக்கள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக, குறைந்த தரத்திலான உற்பத்திப்பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) மனித வளத் திட்டம்**

1984 இன் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தின் மூலம் இலங்கை நியமங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு 393 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். இந்த ஊழியர்கள் சட்ட செயற்பாடுகளின்

செயலாற்றலிற்கு நேரடியாகப் பங்களிக்கின்றனர், மேலும் 2021 யூலை 31 இல் உள்ளவாறு வெற்றிடங்களிற்கு பங்களிக்கின்ற 106 வெற்றிடங்கள் காணப்பட்டன. இதன் விளைவாக, விரைவான ஆய்வுகூட சோதனை, அறிக்கையிடல், தரப்படுத்தல், மீளாய்வு, சந்தை சோதனை மூலம் தரமற்ற உற்பத்திப்பொருட்களை இனங்காணுதல் மற்றும் இறக்குமதி-ஏற்றுமதி சோதனை முறைகளை செயற்திறனாக அமுல்ப்படுத்துதல் போன்ற கூட்டுத்தாபன நோக்கங்களில் தாமதங்கள் மற்றும் குறைப்புக்கள் அவதானிக்கப்பட்ட அதேநேரம் ஆய்வுகூட அறிக்கைகளைப் பெறுவதில் மட்டுப்படுத்தல்கள் மற்றும் தாமதங்கள் காணப்பட்டன.

**(இ) ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல்**

ஆய்வுகூட கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ஹல்பரவத்த மாலபே பிரதேசத்தில் 03 ஏக்கர் காணியை கொள்வனவு செய்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 168,000,000 தொகையும் அதற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் காணியை சுற்றி வேலி அமைப்பதற்காக ரூபா 1,165,333 தொகையுமாக ரூபா 169,165,333 கூட்டுமொத்த தொகையை இலங்கை நியமங்கள் நிறுவனம் செலுத்தியிருந்தது. ஆனால் 2021 யூலை 31 அளவில் கம்பனிக்கு உரிமைகளைப் பெற முடியவில்லை. இதன் விளைவாக, நிறுவகப் பணியின் முக்கிய கூறான இரசாயன பரிசோதனைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான ஆய்வுகூட கட்டிடத்தை நிர்மாணிக்கும் நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், நிறுவனம் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் ஆய்வுகூட சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது, இதன் விளைவாக, சுயாதீன ஆய்வுகூட அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் மட்டுப்படுத்தல்களும் தாமதங்களும் காணப்பட்டன.

மேலும், ஆய்வுகூட சோதனைகளை நடாத்துவதற்கு தற்காலிக தீர்வாக வெளியக கட்டிடமொன்று ரூபா 11,400,000 கிரயத்தில் குத்தகைக்கு பெறப்பட்டு செலவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.2 நிறுவனத்தின் செயற்பாடு

### 3.2.1 ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குதல்

நிறுவனத்தால் நிறுவப்பட்ட ஒவ்வொரு ஆய்வுகூடத்திலும் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதுடன் சோதனை அறிக்கைகளை வழங்குவது தொடர்பாக மாதிரி கணக்காய்வு நடாத்தப்பட்டது, மேலும் இந்த மாதிரி செயன்முறையின் போது 2019 ஆம் ஆண்டில் 100 உணவு ஆய்வுகூட சோதனை அறிக்கைகள், 184 மின் சாதன சோதனை அறிக்கைகள், 256 இரசாயனங்கள் பற்றிய சோதனை அறிக்கைகள், 218 நுண்ணுயிரியல் சோதனை அறிக்கைகள் மற்றும் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின்

தரம் தொடர்பான 81 சோதனை அறிக்கைகள் உட்பட மொத்தம் 839 ஆய்வுகூட அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் இறக்குமதி பரீட்சிப்பு வழிகாட்டியின் 3.14 (1) ஆம் பந்தியின் பிரகாரம் 481 சந்தர்ப்பங்களில் 03 நாட்கள் முதல் 183 நாட்கள் வரையான காலவிச்சிலான தாமதங்கள் ஏற்பட்ட போதிலும் கோரிக்கை கடிதத்துடன் மாதிரியை அன்றே அல்லது அதற்கு மறுநாள் சம்பந்தப்பட்ட ஆய்வுகூடத்திற்கு அனுப்ப வேண்டும். விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு 03 நாட்கள் முதல் 130 நாட்கள் வரையிலான காலவிச்சில் 359 தாமதங்களும், மாதிரிகள் பெறப்பட்ட போதிலும் பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்கு 06 முதல் 77 நாட்கள் வரையான காலவீச்சில் 130 தாமதங்களும், அறிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக 03 முதல் 105 நாட்கள் வரையான காலவீச்சில் தாமதமான 169 சந்தர்ப்பங்களும் மற்றும் சோதனை அறிக்கைகளை தயாரிப்பதற்காகவும் ஆய்வுகூடத்தின் தலைமை பொறுப்பாளரால் சான்றுபடுத்தப்படுவதற்காகவும் ஒதுக்கப்படும் திகதி மற்றும் சோதனை தொடங்கப்படுதல் என்பவற்றிற்காக 05 முதல் 41 நாட்கள் வரையிலான காலவீச்சில் தாமதமான 72 சந்தர்ப்பங்களும் காணப்பட்டதுடன் 7 நாட்கள் முதல் 30 நாட்கள் வரையிலான காலவீச்சிலான 48 தாமதங்களும் காணப்பட்டன. இந்த தாமதங்கள் காரணமாக, தரமற்ற பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 3.2.2 உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னத்தை பெற்றுக்கொள்ளுதல் (SLS சான்றிதழ்)

1992 திசெம்பர் 21 ஆம் திகதிய 746 / 4-1992 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்ளூர் ரின் மீன் மற்றும் பழுப்பு சீனிக்கான உற்பத்திப்பொருள் சான்றிதழை (SLS சான்றிதழ்) பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். நுகர்வோர் விவகார அதிகாரசபையின் வசம் உள்ள வர்த்தக நாமத் தரவுகள் மற்றும் தற்போது இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் சான்றுபடுத்தப்பட்ட வர்த்தக நாமங்களின் பட்டியலைச் சரிபார்த்த போது பின்வரும் உண்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2019 திசெம்பர் 31 அளவில் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தகவலின் பிரகாரம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன்கள் 14 வர்த்தக நாமங்களில் சந்தைக்கு விடுவிக்கப்படும், அவற்றில், 2021 யூன் 30 அளவில் வியாபார பெயர் (SLS சான்றிதழ்) 5 விடயங்களுக்கு மாத்திரமே பெறப்பட்டிருந்தது. மாதிரியில் சேர்க்கப்பட்டுள்ள ஒன்பது வர்த்தக நாமங்களிலான ரின் மீன்கள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று உற்பத்திச் சான்றிதழ்கள் (SLS சான்றிதழ்) மற்றும் இலங்கை நியமங்கள் சான்றிதழ் என்பன காணப்படுகின்ற போதிலும் சந்தையில் விற்கப்படும் பளுப்பு சீனிக்கான வர்த்தக நாமங்கள் இலங்கையில் உள்ள பளுப்பு சீனி உள்ளூர்

உற்பத்தியாளர் எவரினதும் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படவில்லை என்பது நுகர்வோர் விவகார அதிகாரசபைக்குத் அறிவிக்கப்பட்டுள்ளது. இது எந்த நிறுவனத்தாலும் பெறப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் தரப்படுத்தப்பட்ட உற்பத்திப்பொருட்கள் கூட நியமங்கள் நிறுவனத்தால் தரத்திற்காக பரீட்சிக்கப்படுவதில்லை என்று தெரிகிறது.

(இ) பொது பாதுகாப்பு மற்றும் தர உத்தரவாதம் (SLS சான்றிதழ்) தடைசெய்யப்பட்ட பொருட்களை அகற்றுதல் மற்றும் தடை செய்தல் பற்றிய உற்பத்திப்பொருள் விழிப்புணர்வு, சட்டத்தில் செயற்பாடுகள் காணப்பட்டாலும், சந்தையில் உயர்தர உற்பத்திப்பொருட்களை வழங்குவதற்கு வசதியாக இருந்தாலும் அத்தகைய முறைமை (செய்தித்தாள், விளம்பரம், இணையம், வானொலி, தொலைக்காட்சி விழிப்புணர்வு) இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சமூக ஊடகங்கள் மற்றும் செய்தித்தாள்களில் பொது பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் உற்பத்திப்பொருட்கள் (உணவு மற்றும் உணவு அல்லாதவை) இன்று சந்தையில் பரந்ளவில் உள்ள போதிலும் அந்த உற்பத்திப்பொருட்கள் அல்லது உற்பத்திப்பொருள் சான்றுபடுத்தல் முத்திரை (SLS சான்றிதழ்) மாதிரிகள் கட்டாயம் தேவை என்ற மருத்துவர்களின் கூற்றுக்கள் அதை கட்டாயமாக்குவதற்கு நியமங்கள் நிறுவனம் எந்தவொரு முன்மொழிவையும் அல்லது பரிந்துரையையும் செய்திருக்கவில்லை.

**3.2.3 நியமங்களின் பயன்பாடு**

இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 4100 CS (Ceylon Standard) மற்றும் SLS நியமங்கள் உள்ளன, மேலும் 2017, 2018 மற்றும் 2019 ஆகிய மூன்று வருடங்களுக்கான நியம விற்பனை மதிப்பீட்டின் போது வழங்கப்பட்ட நியமங்களில் 500 – 600 இற்கு இடையேயானவை பயன்பாட்டில் இல்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் நியமங்கள் அமைப்பால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்கள், உழைப்பு மற்றும் கிரயத்தை பயன்படுத்தத் தவறியமையானது நியமமற்ற உற்பத்திப்பொருட்களை தடையின்றி சந்தையில் நுழைய அனுமதிக்கிற உற்பத்திப்பொருள் நியமங்களை ஒழுங்குபடுத்தாதை குறிக்கிறது. எரிவாயு, தேங்காய் எண்ணெய், பல்வேறு மின்சாதனங்கள், பால் பவுடர் போன்றன அத்தகைய உற்பத்திப் பொருட்களின் உதாரணங்களாகும்.

### 3.2.4 சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள்

---

சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் பிரிவு, இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டிய ஒருங்கிணைந்த திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டிய செயல்நடவடிக்கை திட்டத்திற்கு ஏற்ப உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும். 2019 சனவரி முதல் ஒக்தோபர் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் செயலாற்றல் முன்னேற்றம் பின்வருமாறுள்ளது.

(அ) ஊடகங்களுடன் தொடர்புடைய நியமங்கள் நிறுவனத்தின் வகிபங்கு மற்றும் முக்கியத்துவம் குறித்து பொது விழிப்புணர்வு தொடர்பான 06 நடவடிக்கைகள் மாத்திரமே நடாத்தப்பட்டன.

(ஆ) உரிய காலப்பகுதியில் பதினைந்து கண்காட்சிகள் இடம்பெற்றன, மேலும் அந்த விற்பனைக் கூடங்களில் என்ன காட்சிப்படுத்தப்பட்டது என்பதை கோவைகள் அவதானிக்கவில்லை.

(இ) உள்ளூர் உற்பத்தியாளர்களின் மேம்படுத்தலின் கீழ் 30 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு அந்தந்த நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் அந் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

இலங்கை நியமங்களான கம்பனியின் நோக்கங்கள் தொடர்பாக உள்ளூர் சந்தையில் பணியாற்றும் நுகர்வோர் அல்லது பொது விழிப்புணர்வு மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் குறைந்த மட்டத்தில் இருப்பதை கணக்காய்வு அவதானித்துள்ளது.

சந்தைப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கருத்தில் கொண்டு, பெரும்பாலான நிகழ்ச்சித்திட்டங்கள் இலாபத்தை நோக்கமாகக் கொண்டவை என்பது அவதானிக்கப்பட்டது. அதாவது, அவர்களது வாடிக்கையாளர்களை அதிகரிக்க தொடங்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாகும். அத்துடன் எந்தவொரு உற்பத்திப் பொருளையும் தெரிவுசெய்து, கொள்வனவு செய்து நுகரும் போது அத் தொடர்பாடல் மூலம் பொதுமக்களால் நாளாந்தம் நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தர உறுதிப்பாட்டை வழங்குகின்ற முதன்மை தரப்பாக இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் செயற்பாடுகள் ஊடாக பொது மக்களுக்கு பொருத்தமான தகவல்களைத் தெரிவித்து வாடிக்கையாளர் முழு விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். ஆனால் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் செயற்பாடுகள் போதாததன் காரணமாக பொதுமக்களின் அந்த உரிமை எதிர்பார்த்த அளவில் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 நியாயமான சந்தைக்கான பின்னணியை உருவாக்குதல்

### 3.3.1 நிராகரிக்கப்பட்ட பொருட்கள்

2019 சனவரி 1 முதல் செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியில் இலங்கை நியமங்களுடன் இணங்காததன் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட 73 பொருட்களின் பாவனைக்கு அல்லது விற்பனைக்கு தடை செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக இலங்கை சுங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 73 விடயங்களில் 49 விடயங்களுக்கு விசாரணை தொடங்கப்பட்டு 7 விடயங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதென அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஆ) 2019 சனவரி முதல் செப்தெம்பர் வரை இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட நிராகரிக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதில் 09 மாதங்கள் முதல் 1 ½ மாதம் வரை தாமதம் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 01)

(இ) நிராகரிக்கப்பட்ட கடிதங்களை ஆய்வு செய்ததில், இறக்குமதியாளர் மறுபரிசீலனைக்கு கோரப்பட்ட மாதிரிகளை வழங்கத் தவறியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் அக்காலத்திலும் பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

நியமங்கள் நிறுவனத்தால் இணங்காததன் காரணமாக சுங்கம் மற்றும் ஏனைய தொடர்பு முகவராண்மைகளுக்கு அனுப்பப்பட்ட பரீட்சிப்பு கடிதங்களை அறிக்கையிட தவறியமை, நியமங்கள் நிறுவனத்தால் பின்தொடரப்படாதமை மற்றும் நியமங்கள் நிறுவனத்தின் முறைமை தொடர்பாக சில இறக்குமதியாளர்களால் புரிந்து கொள்ளப்படாமை. அத்தகைய வெளியீடுகள் அல்லது அத்தகைய பொருட்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகைய மூன்று விடயங்களின் விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| பதிவு இல. | விடய இல. | விபரம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| 19/5929 | ஈஎன்எஸ்பி/சிபியூ/எம் ஐஎஸ்சீ/17/2019 | 90 PLS Socket Outlets | மறுப்புக் கடிதம் 2019 பெப்ரவரி 15 இல் அனுப்பப்பட்டது. 2019 ஒக்தோபரில் சுங்கம் பொருட்கள் மீதான விசாரணையைத் தொடங்கியிருந்தது. அப்போதும் கூட, கடிதத்தைப் பொருட்படுத்தாமல் அசல் பொருட்களை |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்றுமதி செய்யுமாறு அவர்களிற்கு அறிவித்து 2019/02/15 இல் நியமங்கள் நிறுவனம் சந்தைக்கு ஒரு கடிதத்தை வழங்கியிருந்தது, |
| | | | |
| 979671 | ஈஎன்எஸ்பி/சிபியூ/2019/00033 | 835 Cartons Ceramic Tiles | இலங்கை நியமங்கள் நிறுவனம் 2019/05/15 இல் விற்பனை அல்லது பாவனை தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு கடிதம் ஒன்றை வழங்கிய போது அதற்குரிய இருப்பு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருந்தது. நியமங்கள் நிறுவனத்திடமிருந்து பரிந்துரையை பெறுவதற்கு சுமார் 06 மாதங்கள் எடுத்ததாலும், அதற்கான வேலைகளை (வீடு கட்டுதல்) விரைவில் பூர்த்தி செய்ய வேண்டியதாலும் பயன்படுத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டது.<br>2019 ஒக்தோபர் 2 இல் சுங்கம் நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவை அழைத்தது, ஆனால் அவர் வரவில்லை. |
| | | | |
| 18/2127 | ஈஎன்எஸ்பி/சிபியூ/018/2019 | 962 Cartons Ceramic Tiles | நிராகரிப்பு கடிதங்கள் 2019/04/12 இல் அனுப்பப்பட்டன, ஆனால் SLSI நடைமுறைகள் பற்றிய புரிந்துகொள்ளல் இல்லாததால், SLSI தீர்மானத்தை பெறுவதற்கு முன்னரே இறக்குமதியாளர் முழு சரக்குத் தொகுதியையும் விற்பனை செய்திருந்தார். |

(ஈ) இலங்கை நியமங்கள் நிறுவனத்தினால் இலங்கை சுங்கப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் மீள் ஏற்றுமதியை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ அல்லது வேறு ஏதேனும் செய்ய வேண்டிய வேலைகள் செய்யப்பட்டாலோ சரிபார்க்கப்பட வேண்டும். பதிலாக, இறக்குமதியாளர், கம்பனியின் பதிவு விபரங்கள், பொருள் விபரங்கள், விலைப்பட்டியல் விபரங்கள் மற்றும் பொதியிடல் பட்டியல் மற்றும் ஏனைய தகவல்களை சுங்கத்திற்கு கொண்டு வரும்படி கேட்கப்பட்டது. இறக்குமதியாளர் வருவதற்கு சிறிது நேரம் எடுத்ததுடன் 15 சந்தர்ப்பங்களில் கடிதத்திற்கு பதில்கள் வராத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. (பின்னிணைப்பு 02)

(உ) 02 மற்றும் 08 மாதங்களுக்கு இடையில் இறக்குமதியாளர் இணக்கத்தை சரிபார்க்க தேவையான ஏற்பாடுகளைச் செய்யாததால், 12 பொருட்களின் தரத்திற்கு தாம் பொறுப்பல்ல என்று இலங்கை நியமங்கள் நிறுவனம் இலங்கை சுங்கத்திற்கு கடிதம் எழுதியிருந்தது. பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட திகதி (அறிவிப்பு திகதி) மற்றும் பரீட்சிப்பு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதியில் இது அவதானிக்கப்பட்டது. இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் பரீட்சிப்பு அறிக்கைகளில் தாமதம் மற்றும் சுங்க விவகாரங்களில் தாமதம் மற்றும் அத்தகைய பொருட்களுக்கு நியமங்கள் நிறுவனம் பொறுப்பேற்கத் தவறியமை ஆகியவற்றின் காரணமாக தரமற்ற பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படும் அபாயம் அதிகமாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 03)

### 3.3.2 பொருட்களின் தர சிக்கல்கள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள்

மாதிரியில் சோதனையிடப்பட்ட சில அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான தொடர்புடைய அவதானிப்புகள் பின்வருமாறு உள்ளன.

#### 3.3.2.1எரிவாயு தொடர்பான பிரமாணம்

நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் எரிவாயுவை ஒரு முக்கிய எரிசக்தி மூலவளமாகப் பயன்படுத்துவது அடிப்படையானதுடன் வேறு மாற்று வழிகள் இல்லை. மேலும், எரிவாயுவிற்கு இரண்டு விநியோகஸ்தர்கள் மாத்திரமே இருப்பது விலை நிர்ணயத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் ஏகபோக சந்தையை உருவாக்கியுள்ளது, இந்த பின்னணியில், எரிவாயுவின் தரம் தொடர்பான தற்போதைய பிரச்சனையால் மக்கள் அசாதாரண எரிவாயு தொடர்பான அபாயங்களுக்கு ஆளாகியுள்ளனர். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை நியமங்கள் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல், கட்டாயப் பொருட்களின் பட்டியல் நுகர்வோர் விவகார அதிகாரசபையால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்தப் பட்டியலில் உள்நாட்டு எரிவாயு அல்லது எரிவாயு சீராக்கி மற்றும் எரிவாயு குழாய் போன்ற சாதனங்கள் சேர்க்கப்பட்டிருக்காததுடன் வெற்று எரிவாயு சிலிண்டரின் நியமம் மாத்திரமே காணப்பட்டது. எனவே, உள்நாட்டு எரிவாயு மற்றும் மேற்குறிப்பிட்ட ஏனைய சாதனங்களுக்காக இலங்கை நியமங்கள் உருவாக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நியமங்களை பயன்படுத்துவதற்கோ அல்லது நியமங்களைச் சோதனையிடுவதற்கோ எந்தவொரு வழிமுறையும் காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) LP Gas ஐ சந்தைக்கு வழங்கும் பிரதான விநியோக நிறுவனமான லிற்ரோ காஸ் கம்பனி இலங்கைக்கு LP எரிவாயுவை இறக்குமதி செய்கிறதுடன் LP எரிவாயு எரிசக்தி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சபையினால் வழங்கப்பட்ட இறக்குமதி

சரிபார்ப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இறக்குமதி சோதனை எரிவாயுவையும் பாதிக்காது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) எனவே, முதன்மை எரிசக்தி வளமூலமாக மக்களின் வாழ்க்கைக்கு மிக நெருக்கமாக உள்ள எரிவாயு எரிசக்தி தொடர்பாக முறையான பிரமாணங்கள் காணப்பட வேண்டிய போதிலும் எரிவாயுக்களின் கலவை மற்றும் LP எரிவாயுவிற்காக பயன்படுத்தப்படுகின்ற சாதனங்கள் தொடர்பான பிரமாணம் இல்லாததால் இந்த எரிபொருட்களின் பயன்பாடு தற்போது ஆபத்தில் உள்ளது.

மேலும், எரிவாயுக்களின் கலவையை சோதிப்பதற்கான இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் தலையீடு தொடர்பான சட்டமும், உள்நாட்டு எரிவாயு தொடர்பான இந்த பிரச்சனைகள் எழும் வரையில் ஏற்பாடுகளை சேர்ப்பதும் இடம்பெற்றிருக்கவில்லை. ஒரு செயற்பாடாக நுகரும் வடிவங்களில் மாற்றம் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களிற்கு உட்பட்ட உற்பத்திப்பொருட்கள் மற்றும் புதுமையான நுகர்வோர் தயாரிப்புகளுக்கு (உதாரணம்: கை சுத்திகரிப்பு, வாய் கழுவுதல் போன்றன) தேவையான நியமங்களை இனங்காண்பதற்காக நுகர்வோர் விவகார அதிகாரசபை, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சபை மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவனம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து அவ்வப்போது ஆய்வுகளை நடாத்தி அத்தகைய முறைமையொன்று இன்றுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

உள்நாட்டு எரிவாயு விபத்துக்கள் ஏற்பட்டதன் பின்னர் உள்நாட்டு எரிவாயுவின் கலவையை ஆய்வு செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கை நியமங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இலங்கை நியமங்கள் நிறுவனம் அந்தச் செயற்பாட்டைச் செய்வதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துதலை துரிதப்படுத்த வேண்டும் என்பது இங்கு அவதானிக்கப்படுகிறது.

### 3.3.2.2இறக்குமதி செய்யப்பட்ட பால்மா

---------------------------------------------------------

மலிபன் டயரி (பிறைவேட்) லிமிட்டட் 2011/07/26 இல் மலிபன் ஆடைநீக்கிய பால்மா என்ற வர்த்தக நாமத்துக்காக இலங்கை நியமங்கள் சான்றிதழுக்காக விண்ணப்பித்திருந்த போதிலும் உணவுக் கட்டுப்பாடு பிரமாணம் 2005 இன் பிரகாரம் உற்பத்திப்பொருளின் 'Fit & Slim Tips Enclosed' மற்றும் தினசரி 2 கிளாஸ் மலிபன் ஆடைநீக்கிய பால் அருந்துவது ஆரோக்கியமான, வலிமையான மற்றும் கட்டுக்கோப்பான உடலை (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) பராமரிக்க உதவும் என்ற லேபிள் காரணமான போதிலும் 2019/01/31 ஆம் திகதிய கடிதத்தில் பின் மற்றும் முன் பக்கங்களில் மெலிந்த உடல்கள் கொண்ட நபர்களின் பட விளக்கக் காட்சிகளின் லேபிளில் மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் நியம சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நியமங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிவித்தல்

காரணமாகவும் SLS நியம சான்றிதழைப் பெறுவதற்கான நடைமுறையைத் தொடர வேண்டிய அவசியமில்லை என்று உற்பத்தி கம்பனி தெரிவித்துள்ளது. எனினும், மலிபன் ஆடைநீக்கிய பால்மா என்ற வர்த்தக நாமத்தின் கீழ் உள்ள உற்பத்திப்பொருள் மேற்கூறிய மாற்றங்கள் எதுவுமின்றி ஏற்கனவே சந்தையில் கிடைக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.3.2.3பீங்கான்**

**-------------**

2019 ஆகஸ்ட் மற்றும் 2020 ஒக்தோபர் இற்கு இடையில் இறக்குமதி செய்யப்பட்ட பீங்கான் டேபிள்வேர்களின் (Porcelain Tableware) 270 நிகழ்வுகளில், தர சோதனை நடைமுறையை பூர்த்தி செய்த பின்னர் தேறிய எடை 152 மடங்கு அதிகமாக இருந்தது. K.G. 1,566,258.40 தேறிய எடை மற்றும் ஐ.அ.டொலர் 849,623.74 பெறுமதியுடையது மாதிரியாக கணக்காய்வின் போது தெரிவுசெய்யப்பட்டதுடன் 75% கன உலோகங்கள் மாத்திமே சோதனை செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இலங்கை நியமங்கள் 1222: பகுதி 1: 2001 (இலங்கை நியமங்கள் 1222: பகுதி 1: 2001) இல் பீங்கான் டேபிள்வேருடன் இணங்குவதைக் கருத்தில் கொள்வதற்கு 16 சோதனைகள் காணப்பட்டன, ஆனால் அவற்றில் ஒன்று ஈயம் மற்றும் காட்மியம் (Lead and Cadmium) சோதனைக்காக நடத்தப்பட்ட உள்ளடக்க சோதனை மாத்திரமேயாகும்.

அதன் பிரகாரம், நியமத்தின் அடிப்படையில் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு 16 சோதனைகள் பரிந்துரைக்கப்பட்ட போதிலும், ஒரு சோதனையின் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்ட பீங்கான் பொருட்களின் தரத்தை தீர்மானிப்பது கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாக இருந்தது.

**3.3.2.4தானிய உணவுகள்**

**--------------------------------**

மேலும், 2017 திசெம்பர் 31 இற்குள் உரிமம் இரத்து செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட தானிய உணவுப் பொருளுக்கான உரிமத்தைப் புதுப்பிப்பதற்கான மாதிரிச் சோதனை 2018 யூலை 15 இல் புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் சோதனை முடிவின் பெறுபேறாக சோதனை தோல்வியடைந்திருந்தது. அதன் பிரகாரம் உரிமம் இரத்து செய்யப்பட்ட திகதியிலிருந்து 11 மாதங்கள் தாமதமாக மீண்டும் உரிமம் நீடிக்கப்படாது என்று 2018 நவம்பரில் தெரிவிக்கப்பட்டது. உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளதென நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டதற்கான எழுத்துமூலமான சான்றாதாரம் எதுவும் காணப்படவில்லை. உரிமம் இரத்து செய்யப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் விதமாக, உற்பத்தியாளர் அச்சிடப்பட்ட SLS சின்னத்துடன் பொதிகளைப் பயன்படுத்துவதற்கு மூன்று மாதங்களுக்குள் அனுமதி கேட்டிருந்த போதிலும் நியமங்கள் அமைப்பு ஏற்கனவே உள்ள பிழைகளை சரிசெய்த பின்னர் புதிய உரிமத்திற்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பத்தை அங்கீகரித்திருந்தது. எவ்வாறாயினும்,

சம்பந்தப்பட்ட உற்பத்திப்பொருட்களுக்கான உரிமம் இரத்து செய்யப்பட்ட திகதியிலிருந்து 17 மாதங்களுக்குள் உற்பத்திப்பொருட்கள் SLS சின்னத்துடன் சந்தைப்படுத்தப்படுமா என்பதை தீர்மானிப்பதற்கு சந்தை மாதிரி சோதனை நடாத்தியிருந்தது என்பதற்கான எந்தவொரு சான்றாதாரமும் காணப்படவில்லை, ஆனால் உற்பத்திப்பொருள் SLS சின்னத்துடன் 2019 மே வரை விற்கப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேற்படி உற்பத்திப்பொருட்களுக்கு மேலதிகமாக, கண்டறியப்பட்ட அத்தகைய பொருட்கள் தொடர்பாக சமூகத்தில் அதிகம் பேசப்படும் பொருட்களாக அரிசி, ஏனைய பால்மா, வெள்ளை சீனி, கோதுமை மா, அரிசி தவிடு, கருவாடு, விவசாய இரசாயனங்கள், நூடுல்ஸ், பாம் எண்ணெய், காய்ந்த மிளகாய், காய்கறிகள் மற்றும் பழங்கள், துப்பரவாக்கல் பொருட்கள், தேங்காய் எண்ணெய் என்பன காணப்படுகின்றதுடன் குறித்துரைக்கப்படலாம்.

சந்தையில் உள்ள பெரும்பாலான உற்பத்திப்பொருட்களுக்கு SLS சின்னம் கட்டாயம் இல்லை என்ற உண்மையின் காரணமாக, தரமற்ற உற்பத்திப்பொருட்கள் சந்தையில் நுழைவதற்கு அனுமதிக்கப்படுகிறதுடன் இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் நிறுவப்பட்ட நியமங்களைப் பின்பற்றுவதற்குப் பதிலாக வாடிக்கையாளரைக் கவரும் ஏனைய வெளிப்புறக் காரணிகளை உள்ளடக்கியிருக்கலாம். அத்துடன் வணிகங்கள் ஊடகங்களை வலுக்கட்டாயமாக பயன்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டன. மேலும், இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் சந்தை ஆய்வுகள் நியமங்களுக்கு இணங்க பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டும், ஆனால் இல்லையெனில், பொதுமக்கள் முறைப்பாடுகள் தவிர தலையீடுகள் மூலம் சரிபார்க்கப்பட முடிந்திருந்த நியம சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

## 4. பரிந்துரை

-----------------

(அ) உற்பத்திப்பொருட்களின் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பு தொடர்பான இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கு இணங்க மாதிரி பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு உற்பத்தி கம்பனிகளை பதிவு செய்தல் மற்றும் இலங்கை நியமங்கள் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்புரைகளுடன் அவர்கள் இணங்குவதை உறுதிப்படுத்துதல் மற்றும் இலங்கையின் உற்பத்திப்பொருள் சான்றிதழ் சின்னத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இறக்குமதி செய்யும் நாடுகளுக்குத் தெரிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ) வழிகாட்டல்களின் பிரகாரம் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான மிகவும் நம்பகமான, தரமான மற்றும் ஆரோக்கியமான முறைகள் மற்றும் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப்பொருளிற்கான இலங்கை நியமங்கள் நிறுவனத்தின்

குறிப்புரைகளுக்கு இணங்க உற்பத்தி செய்யும் நாட்டின் தேசிய நியமங்கள் நிறுவனத்திடம் இருந்து ”உற்பத்திப்பொருளின் உற்பத்தியாளர் இலங்கை நியமங்கள் நிறுவனத்தில் பதிவு செய்து இணக்கச் சான்றிதழைப் பெற்று, உற்பத்திப்பொருள் சான்றிதழ் முத்திரையைப் பெற்றுள்ளார்” ஆகிய இரண்டு முறைகள் கம்பனியை அடிப்படையாகக் கொண்டு பொருட்களை இறக்குமதி செய்யும் இந்த முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(இ) கஞ்சியங்களின் அதிக கிரயம் காரணமாக ஆய்வு அறிக்கைகள் வழங்கப்படுவதற்கு முன்னர், இறக்குமதியாளர் தனது களஞ்சியத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் உள்ளன, அப்படியானால், ஆய்வு அறிக்கைகளின் முடிவுகள் வரும் வரை பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நியமங்கள் நிறுவனத்தால் நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல்.

(ஈ) சந்தைக்கு உயர் தரமான ஆரோக்கியமான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் விடுவிக்கப்படுகின்றதை உறுதிப்படுத்தவதற்கு இலங்கை நியமங்கள் நிறுவனம், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுக்கு இடையே நல்ல உறவைப் பேணுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்துதல்.

(உ) தேவையான ஆட்சேர்ப்புகளை விரைவாகவும் சுதந்திரமாகவும் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஊ) ஆய்வுகூட அறிக்கைகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதால், இறக்குமதியாளரின் களஞ்சியங்களில் உள்ள பொருட்களை சந்தைக்கு விடுவித்தல், சில பொருட்களின் காலாவதி மற்றும் சில பொருட்களின் தரத்தில் மாற்றங்கள் ஏற்படலாம். எனவே, சந்தைக்கு விடுவிக்கப்படும் தரமற்ற பொருட்களின் அபாயத்தைக் குறைப்பதற்கு ஆய்வுகூட அறிக்கைகளை தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(எ) உற்பத்திப்பொருட்கள் நிலையான சின்னத்தை கொண்டிருப்பது கட்டாயமானதுடன் SLS சின்னத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா, சின்னம் தடைசெய்யப்பட்டுள்ளதா, பதிவு காலாவதியாகியுள்ளதா, அல்லது பதிவின்றி சின்னம் பயன்படுத்தப்படுகிறதா என்பதை கண்டறிவதற்கு நிலையான சின்னத்தைக் கொண்ட உற்பத்திப்பொருட்கள் சந்தையில் அவ்வப்போது சரிபார்க்கப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து பொதுமக்களை அறிவூட்டுவதற்கு பொருத்தமான பொறிமுறையை அமுல்ப்படுத்துதல்.

(ஏ) வருடாந்தம் சான்றுபடுத்தப்பட்ட பொருட்களின் வகைகள் மற்றும் தரச்சான்றிதழைப் பெறுவதற்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் நியம சான்றிதழைப் பெறத்

தவறிய பொருட்கள் எவை மற்றும் அத்தியாவசியமாக உள்ள போதிலும் நியம சான்றிதழை பெறத் தவறிய பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு அவ்வப்போது தெரிவிப்பதற்கு பொருத்தமான முறைமையொன்றை நிறுவுதல்.

(ஐ) கட்டாயப் பொருட்கள் சந்தையில் நியம சின்னத்தின் (SLS) தரப்படுத்தலுக்குப் பொறுப்பான தொடர்புடைய முகவராண்மைகளுக்கு ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்கு நியமங்கள் நிறுவனத்திற்குத் தேவையான சட்டப்பூர்வ அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) மேற்கொள்ளப்படும் சந்தை ஆய்வுகளின் அளவை அதிகரிப்பதற்கு பொருத்தமான வழிமுறை வகுக்கப்பட வேண்டும். நிலையான சின்னத்தை பெறுவதில் தொடர்புடைய உற்பத்தியாளரால் வழங்கப்பட்ட மாதிரிகளுக்கு மேலதிகமாக சந்தையில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்தல் மற்றும் அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் நிலையான சான்றிதழை வழங்கும்போது அந்த அறிக்கைகளை கவனத்தில் கொள்ளுதல்.

(ஓ) அனைத்துத் துறைகளிலும் உள்ள உற்பத்தியாளர்கள் நியமங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உயர் தரமான உற்பத்திப்பொருட்களை சந்தைக்கு வழங்குவதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும் தரமான சான்றுபடுத்தப்பட்ட பொருட்களை நுகர்வதற்கு பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்.

(ஔ) பொதுமக்களை சென்றடையக்கூடிய அதிக செலவு குறைந்த மற்றும் அணுகக்கூடிய ஊடகங்கள் மூலம் நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிப்பதிலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதிலும் கவனம் செலுத்துதல்.

(க) உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து சந்தைக்குச் செல்லும் வரை பொருட்களின் தரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நியமங்கள் அமைப்பிற்கு இருப்பதால், தரமற்ற பொருட்கள் சந்தைக்கு விடுவிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான முறையான பொறிமுறையை உருவாக்குதல்.

(கா) பொருத்தமற்ற உற்பத்திப்பொருட்கள் சந்தையில் நுழைவதைத் தடுப்பதற்குப் பொறுப்பான முகவராண்மைகளுடன் நெருக்கமாக ஒருங்கிணைத்தல்.

(கி) தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு இலங்கை நியமங்கள் நிறுவன சட்டத்தை திருத்த வேண்டியதன் அவசியத்தை கவனத்தில் கொள்ளுதல்.

ஒப்பம்./டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
2022 பிப்ரவரி 24

**பின்னிணைப்பு 01**

| SLSI பதிவு இல. | நிராகரிப்பு கடித திகதி | விபரம் | வழக்கு பதிவு செய்யப்பட்ட திகதி | தாமதம் (மாதம்) |
|---|---|---|---|---|
| SLSI/19/5929 | 2019/02/15 | 90 International Socket outlet துண்டுகள் | 2019/10/14 | 08 |
| 976557 | 2019/01/16 | 80 Coils of Hot Dipped Galvanize Iron wire | 2019/10/10 | 09 |
| SLSI/19/13363 | 2019/06/03 | 150 Modular Socket துண்டுகள் | 2019/08/28 | 02 |
| SLSI/19/3811 | 2019/05/15 | 9828 Ceramic Tiles பெட்டிகள் | 2019/10/06 | 04 1/2 |
| SLSI/19/10798 | 2019/06/19 | 600 Porcelain Tableware தொகுதிகள் | 2019/10/07 | 04 1/2 |
| SLSI/18/3200 | 2019/01/31 | 3720 Cartons 'Markfed ' Brand | 2019/06/02 | 04 |
| SLSI/19/4824 | 2019/06/12 | 1400 CTN Porcelain Table ware | 2019/07/17 | 1 1/2 |
| SLSI/19/11620 | 2019/06/19 | Porcelain Tableware | 2019/10/07 | 03 1/2 |
| 974581 | 2019/08/27 | 3368 பாதுகாப்பான மோட்டர் சைக்கிள் தலைக்கவச துண்டுகள் | 2019/10/10 | 1 1/2 |
| 978235 | 2019/04/10 | 1017 பாதுகாப்பான மோட்டர் சைக்கிள் தலைக்கவச துண்டுகள் | 2019/05/21 | 1 1/2 |
| SLSI/19/5682 | 2019/05/21 | 215 CTNS of Ceramic Ware | 2019/10/06 | 4 1/2 |
| SLSI/19/8533 | 2019/04/12 | 1150 CTNS Of Porcelain Ware | 2019/10/08 | 06 |
| 974531 | 2019/08/27 | 3368 பாதுகாப்பான மோட்டர் சைக்கிள் தலைக்கவச துண்டுகள் | 2019/10/10 | 1 1/2 |
| 977431 | 2019/05/24 | 2217 கல்வனைஸ் அலுமினிய குழாய் துண்டுகள் | 2019/10/06 | 04 1/2 |

**பின்னிணைப்பு 02**

| SLSI பதிவு இல. | வழக்கு இல. | வழக்கு பதிவு செய்யப்பட்ட திகதி | விடயம் | இறக்குமதியாளர் | தரவு அனுப்பப்பட்ட திகதி | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|
| 19/9717 | ENSP/CPU/ 050/2019 | 2019/07/17 | 1400 Cartons of Round 9' Soup plates | இனோவற்றிக் லங்கா பிறைவேட் லிமிட்டட் | 19/07/17 19/07/23 | கணக்காய்வு திகதியான 2019/11/20 வரையிலும் கிடைக்கவில்லை |
| 976557 | ENSP/CPU/MISC/18/ 2019 | 2019/10/10 | 80 Coils of Hot Dipped Galvanized Iron Wire | அற்லஸ் றேட் சென்ரர் | 2019/10/14 | மேற்படி |
| 14742 | ENSP/CPU/ 067/2019 | 2019/09/30 | 458 PLS Of Vacum Flask | பரகத் ரெக்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 2019/10/08 | மேற்படி |
| 19/6786 | ENSP/CPU/ 059/2019 | 2019/08/08 | 360 Boxes of Ceramic Tile | எஸ்எஸ் என்ரபிறைசஸ் | 2019/08/08 2019/09/29 | மேற்படி |
| 19/5322 | ENSP/CPU/ 009/2019 | 2019/02/27 | 19 PLC of Protective Motor Cycle Helmet | அர்சாட் என்ரபிறைசஸ் | 2019/03/14 2019/08/27 | மேற்படி |
| 19/13363 | ENSP /CPU/MISC/002/2019 | 2019/08/28 | 150 Pcs of Modular Socket | | 2019/08/28 | மேற்படி |
| 19/8533 | ENSP/CPU/ MISC/19/ 2019 | | | பாம்ஸ் இன்ரநசனல் பிறைவேட் லிமிட்டட் | 2019/10/08 | மேற்படி |
| 18/2172 | ENSP/CPU/ 018/2019 | 2019/04/30 | 550 Soup Plates (9')962 Cartons ceramic tiles | மக் என்ரபிறைசஸ் | 2019/08/19 | மேற்படி |
| 979671 | ENSP/CPU/ 2019/00033 | 2019/06/10 | Ceramic Tiles 8 Cartons | Dguamic Drends | 2018/09/20 | மேற்படி |
| 19/18526 | ENSP/CPU/069 /2019 | 2019/10/10 | 3680 Cartons Canned Flash | P.M Mohanmedali & CO | 2019/10/17 | உணவுக் கட்டப்பாட்டாளர் களால் பரிசீலிக்கப்பட வேண்டும் |
| 974581 | ENSP/CPU/071 /2019 | 2019/10/10 | மோட்டார் சைக்கிள் தலைக்கவசம் | ககிகி ஹோல்டிங்ஸ் | 2019/10/08 | கணக்காய்வு திகதியான 2019/11/20 வரையிலும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | கிடைக்கவில்லை |
| 977431 | ENSP/CPU/032/2019 | 2019/10/06 | 2217 PCS Salvanized Pipe | மெகா சேவிஸஸ் லங்கா பிறைவேட் லிமிட்டட் | 2019/09/23 | மேற்படி |
| 19/5493 | ENSP/CPU/2019/00049 | 2019/07/12 | (6 Packets of Hot Rolled Alloy Steel wire rode | ரொக் கற் பிறைவேட் லிமிட்டட் | 2019/06/26 | மேற்படி |
| 19/3811 | ENSP/CPU/2019/00034 | 2019/10/06 | Ceramic Tiles 1051 Dark (Zplts)1353 Highlight (2plts ) 1333 Dark blue | Sanshi clearing &Transportes | 2019/06/10<br>2019/09/26<br>2019/10/25 | மேற்படி |
| 19/8533 | ENSP/CPU/2019/00019 | 2019/04/30 | 550 CTNS Of 9' Soup Plates | பாம்ஸ் இன்ரநசனல் பிறைவேட் லிமிட்டட் | 2019/05/02<br>2019/08/19 | மேற்படி |

**பின்னிணைப்பு 03**

| ளுடுளுஜ பதிவு இல. | அறிவித்தல் திகதி | கடிதம் அனுப்பிய திகதி | உற்பத்திப்பொருள் | இறக்குமதியாளர் | வர்த்தக நாமம் மற்றும் தரம் |
|---|---|---|---|---|---|
| 978448 | 2018/10/16 | 2019/03/15 | Sewing Thread | Sea Thread | 06 CTNS |
| 974556 | 2018/08/07 | 2019/03/12 | குழாய் பொருத்துக்கள் | இலங்கை மின்சார சபை | 11 KG |
| 974557 | 2018/08/07 | 2019/03/12 | PVC குழாய்கள் | இலங்கை மின்சார சபை | 02 Pkgs |
| 979979 | 2018/11/15 | 2019/01/22 | Cistern Fittings | Sino Trading | 156 CTNS |
| 979590 | 2018/11/09 | 2019/07/18 | Porcelain Ware( mugs ) | A j EnterPrices | 864 PLS |
| SLSI/18/1699 | 2018/12/11 | 2019/06/03 | தலைக்கவசம் | Decathlon Lanka Sport Access (PVT) Ltd | 1538 PLS |
| 979367 | 2018/11/05 | 2019/06/03 | Vacuum Flask | New Sun Traders | New sun 180 Pcs |
| SLSI/19/9664 | 2019/03/29 | 2019/08/2 | செரமிக் மாபிள்கள் | AFSHEEN Tile | YAN 2880 Bakes |
| 980103 | 2018/11/19 | 2019/03/04 | செரமிக் தரை மாபிள்கள் | Sun Ward Trading (PVT)Ltd | SUN WARD 4380 CTN |
| 980105 | 2018/11/19 | 2019/03/04 | செரமிக் தரை மாபிள்கள் | Sun Ward Trading (PVT)Ltd | SUN WARD 3830 CTN |
| 974861 | 2018/08/13 | 2019/03/14 | கிறிக்கட் தலைக்கவசம் | DIMATH Sports (PVT) Ltd | 150 CTNS |
| SLSI/19/ 9019 | 2019/03/25 | 2019/07/18 | செரமிக் மாபிள்கள் | Mac Enterprises | 1968 CTN |